# The Baptist Tabernacle of Los Angeles


1329 South Hope Street, L.A. Civic Center

Mailing Address:
P. O. Box 15308
Los Angeles, CA 90015
Phone: (213) 744-9999
E-mail: rlhymersjr@sbcglobal.net
www.sermonsfortheworld.com
www.baptisttabernacle.com






Dr. R. L. Hymers, Jr.
Founding Pastor

Dr. Christopher L. Cagan
Pastor


டிசம்பர், 2019

அன்புள்ள நண்பரே:

நான் ஒரு மகிழ்ச்சிகரமான கிறிஸ்மஸ் வாழ்த்துக்கடிதம் அனுப்ப முடியும் என்று நான் விரும்பினேன். ஆனால், உண்மையாக சொன்னால், சென்ற வருடம் ஒரு பாதியில் மெய்யாகவே ஒரு பயங்கரமான சபை பிளவை நாங்கள் அனுபவித்தோம் என்பதை உங்களுக்கு நான் சொல்ல வேண்டியது அவசியம்.

சென்ற ஆண்டு அநேக மாதங்களுக்கு முன்பாகவே இது ஆரம்பித்தது. எங்கள் சீனியர் டீக்கன் வேறொரு போதகரோடு இரகசிய கூட்டம் நடத்த ஆரம்பித்திருந்திருக்கிறார். அந்த இருவரும் எங்கள் சபையை அழிக்க ஒரு திட்டமிட்டார்கள். அந்த இருவரும் மற்றொரு சபையை உருவாக்க திட்டமிட்டார்கள் மற்றும் எங்களிலிருந்து அவர்களால் முடிந்த வரையிலும் மக்களை இழுத்தார்கள். நான் அதை கண்டநேரத்தில் ஒரு பெரிய சபை பிளவை தவிர்ப்பதற்கு அது மிகவும் காலதாமதம் ஆகிவிட்டு இருந்தது.

ஒரு உருமல் சத்தமிடுகிற டீக்கன் என்னோடு “முதல் சண்டை” போட ஒரு முயற்ச்சி எடுத்தபொழுது இது ஆரம்பித்து இருந்தது. நான் அவனோடு சண்டையிட மறுத்தபொழுது, அவன் சபையைவிட்டு போனான். விரைவில் மற்றவர்களும் பின்பற்றிபோனார்கள். டீக்கன்களின் தலைவர் தன்னுடைய வலைதளத்தில் தானாக ஆபாச புகைப்படங்களைப் போட்டார். அந்தப் புகைப்படங்களை வைத்து “பிரிந்துபோனவர்களில்” ஒருவர் என்னை பயமுறுத்தி பணம்பறிக்க முயற்ச்சி எடுத்தார், காவலர்களும் தலையிடத் தொடங்கினர். அந்த டீக்கன்களின் தலைவர் தன்னுடைய மனைவியோடு எங்கள் சபையை விட்டு போனார்.

அந்த நேரத்தில், அந்த சீனியர் டீக்கன் வெளிப்படையாக செயல்பட்டான். அவன் எங்கள் சபையை விட்டு போனான் மற்றும் அவனால் முடிந்த வரையிலும் மக்களை இழுக்க ஆரம்பித்தான். ஏன் என்றால் அந்த சீனியர் டீக்கன் பல பத்தாண்டுகள் எங்கள் சபையில் ஒரு தலைவர் பொறுப்பில் இருந்திருக்கிறான், அநேக மக்கள் அவனை பின்பற்றி எங்கள் சபையைவிட்டு போனார்கள். சபை பிளவு முடிந்த தருணத்தில், எங்கள் மக்களில் பாதிபேரை அவனால் வெளியே இழுத்துவிட முடிந்தது.

அந்த நேரத்தில் எனது சரீர பிரச்சனை திடீரென மேலோங்கியது மற்றும் இரண்டு ஞாயிறு கூட்டங்களிலும் என்னால் பிரசங்கிக்க முடியவில்லை. ஞாயிறு காலைகளில் ஒரு செமினரி மாணவன் பிரசங்கம் செய்தான். ஆனால் அவனுடைய அநேக நெருங்கிய நண்பர்கள் அந்த பிளவிலே விட்டு போனபொழுது அவன் என்னோடு நிற்க மிகவும்

***எங்களது வலைதளத்தில் வார்த்தைக்கு வார்த்தை போதனைகள் நூற்றுக்கணக்காக இருக்கின்றன அவைகள் நாற்பத்திரண்டு மொழிகளில் கிடைக்கின்றன அந்த வலைதளம் WWW.SERMONSFORTHEWORLD.COM.***

அனுபவமில்லாதவன். பிப்ரவரி 20ல் இந்த இளம் மனிதன் என்னோடு ஐக்கியத்தை முறித்தான். அவனும் அவனது தாயாரும் சபையை விட்டார்கள் மற்றும் புதிய சுவிசேஷ சபைகளுக்கு போக ஆரம்பித்தார்கள். இந்த இளம்பிரசங்கி எனது நெருங்கின தனிப்பட்ட நண்பனாக எண்ணியிருந்தபொழுது, இது எனக்கு மிகவும் அதிகமாகும். பிப்ரவரி 23ல், பாஸ்டரான எனது வேலையை நான் இராஜினாமா செய்தேன் மற்றும் டாக்டர் கிறிஸ்டோபர் கேஹன் புதிய பாஸ்டராக மாறினார். நான் மாஜி பாஸ்டராக நியமிக்கப்பட்டேன். நான் கூட்டங்களில் கலந்து கொள்வதில் மிகவும் பெலவீனனாக இருந்தேன். மார்ச் 3ல், எனது ஓய்வையும் தமது பாஸ்டராக நியமனத்தையும் டாக்டர் கேஹன் அறிவித்தார். டாக்டர் கேஹன் நான் அறிந்தவர்களில் பாஸ்டர் உம்ராண்டைவிட, மிகப் பெரிய கிறிஸ்தவராகும். அவரது தலைமை இல்லாமல் நமது சபை ஒருபோதும் மீட்கப்படமுடியாது.

ஆனால் நல்ல காரியங்கள் தொடர்ந்து நடந்தன. ஜனவரி 26ல் நமது வலைதளத்தில் 41வது மொழி சேர்க்கப்பட்டது. அதே நாளில் (ஜனவரி 26) நமது “செயலி” ஐபோன் மற்றும் ஆன்டுராய்டுக்கு உயர்ந்தது. அதிலிருந்து உலகமுழுவதிலும் ஆயிரக்கணக்கான மக்கள் “செயலி” மூலமாக நம்மோடு சேர்ந்து கொண்டார்கள், நியூயார்க் நகரத்தில் யூதமக்களுக்கு ஒரு மிஷனரியாக இருக்கும், ஒரு நண்பருக்கு அதிகமாக நன்றி. அதன்பிறகு நமது 42வது மொழி சேர்க்கப்பட்டது – ஆப்பிரிக்காவின் பிரதான மொழியாகிய மாலவி. பிப்ரவரி 23ல், டாக்டர் கேஹன் அலுவலக பூர்வமாக புதிய பாஸ்டராக மாறினார் மற்றும் நான் மாஜி பாஸ்டராக நியமிக்கப்பட்டேன்.

இந்த எல்லா குழப்பத்திலுமிருந்து நான் பெலவீனனாக மற்றும் சுகவீனமாக இருந்தேன், என்று சொல்ல தேவையில்லை. எனது மனைவிக்காக நான் மிகவும் நன்றி உள்ளவனாக இருக்கிறேன் – இவைகள் எல்லாவற்றிலும் என்னோடு நின்றாள். பிப்ரவரி 27 முதல் மார்ச் 20 வரையிலும் ஓய்வுக்காக நான் அவளை நீட்டிக்கப்பட்ட விடுப்பில் அரிஷோனாவுக்கு அழைத்து சென்றேன். மார்ச் 20ல், நான் பிரசங்கம் செய்ய ஞாயிற்றுக்கிழமை மாலைகளிலும் மற்றும் போதிக்க சனிக்கிழமை மாலைகளிலும் திரும்பினேன்.

அப்பொழுது இருந்து எங்களது சபை கட்டிடம் விற்பனைக்காக வைக்கப்பட்டு இருக்கிறது. ஏப்ரல் 14ல் எனது 78வது பிறந்த நாள்விழா பழைய கட்டிடத்தில் கொண்டாடபட்டது. மே 7ல் நமது சபையில் உண்மையுள்ள இளம் மக்களுக்காக, “சுவிசேஷ வெடி”ஐ நமது பாடபுத்தகமாக கொண்ட ஒரு சீஷத்துவ குழுவை நான் ஆரம்பித்தேன். மே 22 முதல் மே 29 வரையிலும், டாக்டர் கேஹன் எனது மனைவி மற்றும் என்னையும் சான் பிரன்சிஸ்கோ பகுதியில் ஒரு சீன பாப்டிஸ்டு சபைக்கு மற்றும் அதன் சிறந்த போதகரிடம் அழைத்து சென்றார். மேலும் மார்டின் கான்டியில் நான் ஆரம்பித்த சபையில் நீண்டகால போதகராக இருந்த, மைக் மற்றும் மோனா ரிலே என்பவர்களை நாங்கள் சந்தித்தோம். மைக் எனக்கு அதிகமான உற்சாகத்தை கொடுத்தார், மற்றும் அவர்களுடைய சபையின் 50வது ஆண்டுவிழாவில் பேசும்படி நான் அழைக்கப்பட்டேன். மற்றவர்கள் அவ்வளவு கனிவாக இல்லை, ஆனால் எங்களது சபை பிளவுக்காக என்னை குற்றப்படுத்தினார்கள், எனக்கு இன்னும் அதிகமான வேதனையை உண்டாக்கினார்கள்.

ஜூலை 28ல் டாக்டர் கேஹன் அவர்களின் 66வது பிறந்த நாளில் பெரிய விருந்து எங்கள் சபையில் இருந்தது. அப்பொழுது சேன் காபிரியேல் வேலியில் உள்ள நமது புதிய சபைக்கு, “தி சைனிஸ் பாப்டிஸ்டு டெபனேக்கல் ஆப் கிரேட்டர் லாஸ் ஏன்ஜல்ஸ்” என்ற பெயர் அறிவிக்கப்பட்டது. அங்கே நாங்கள் ஒரு புதிய கட்டிடம் வாங்கினோம் எஸ்குரோ விரைவில் மூடப்படும்.

*எங்களது வலைதளத்தில் வார்த்தைக்கு வார்த்தை போதனைகள் நூற்றுக்கணக்காக இருக்கின்றன அவைகள் நாற்பத்திரண்டு மொழிகளில் கிடைக்கின்றன அந்த வலைதளம்*

***WWW.SERMONSFORTHEWORLD.COM.***

ஜூலை கடைசியில் திருமதி ஹைமர்ஸை மற்றொரு குறுகிய விடுப்பாக கடற்கரை பகுதிக்கு நான் அழைத்து சென்றேன். எனது மனைவி, இல்லினா, இந்த முழுஉலக அளவில் சிறந்த பாஸ்டரின் மனைவி என்பதில் சந்தேகமில்லை. எனது மகன் ராபர்ட் லெஸ்லீ மற்றும் நானும் அவளையும் மற்றும் அவளுடைய பெற்றோர் இருவரையும் இஸ்ரேலுக்கு அனுப்பினோம். நவம்பர் 17ல் ஞாயிறு காலை மற்றும் மாலையில் ஒரு போதனைகளின் வரிசையை நான் ஆரம்பித்தேன். நீண்ட நாட்களுக்கு பிறகு ஞாயிற்று கிழமையின் இரண்டு கூட்டங்களிலும் பிரசங்கிக்க சரீரபிரகாரமாக சாதகமாக இருந்தது இதுவே முதலாவதாகும். டாக்டர் கேஹன் அவர்களின் நடத்துதல் மற்றும் கடின உழைப்பினால், இரண்டு இளம் வாலிபர்கள் இரட்சிக்கப்பட்டு இருக்கிறார்கள், மற்றும் அநேக சீன மாணவர்கள் நமது சபைக்கு வர ஆரம்பித்திருக்கிறார்கள். டாக்டர் கேஹன் டவுன்டவுன் லாஸ் ஏன்ஜலஸில் இருந்த தமது வீட்டை விற்றுவிட்டார், மற்றும் சேன் காபிரியேல் கட்டிடத்துக்கு அருகில் வேறொரு வீட்டை பார்த்துக்கொண்டு இருக்கிறார். அடுத்த சில மாதங்களில் நாம் புதுகட்டிடத்துக்கு நமது சபையை மாற்றுவோம்.

சபைபிளவு முடிந்தது என்று காணப்படுகிறது. நம்பிக்கை நகரத்தில், எனது புற்றுநோய் குணமாகிவிடும் என்று, சில நாட்களுக்கு முன்பாக எனக்கு சொல்லப்பட்டது. எனது வீட்டில் டாக்டர் கேஹன், எனது மனைவி மற்றும் நானும் மற்றும் எனது பையன்கள் மற்றும் பேரபிள்ளைகளோடும், இந்த பெரிய சோதனை நேரத்தில் எங்களோடு நின்றவர்களோடும் நன்றி செலுத்துதலை கொண்டாடினோம். எங்கள் அனைவருக்கும் அது ஒரு அற்புதமாக இருந்தது!

கர்த்தர் உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக! நாங்கள் சீன சபையை ஆரம்பிக்கும்பொழுது தயவுசெய்து எங்களை ஜெபத்தில் நினைவு கூறுங்கள்!



எனது குடும்பத்துக்காக நான் மிகவும் பெருமை படுகிறேன். இடமிருந்து வலம், வேஸ்லி, குழந்தை ஹேனாவோடு லெஸ்லீ, நான், குழந்தை சாராவோடு இல்லினா, லெஸ்லீயின் மனைவி ஜின், இல்லினாவின் தாயார் லிண்டா மற்றும் அவளுடைய சகோதரன் எட்வின் கூல்லர்.

நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்து
துதிக்கப்படுவாராக!



ஆர். எல். ஹைமெர்ஸ், ஜூனியர்
D.Min., Th.D., Litt.D.
பிலிப்பியர் 4:13

“நானோ, ஜீவனுள்ளோர் தேசத்திலே கர்த்தருடைய நன்மையைக் காண்பேன் என்று விசுவாசியாதிருந்தால் கெட்டுப்போயிருப்பேன். கர்த்தருக்குக் காத்திரு; அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்; திடமனதாயிருந்து, கர்த்தருக்கே காத்திரு” (சங்கீதம் 27:13-14).

*எங்களது வலைதளத்தில் வார்த்தைக்கு வார்த்தை போதனைகள் நூற்றுக்கணக்காக இருக்கின்றன அவைகள் நாற்பத்திரண்டு மொழிகளில் கிடைக்கின்றன அந்த வலைதளம் WWW.SERMONSFORTHEWORLD.COM.*